ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

விவேகவிளக்கக் கீர்த்தனம்.

ஸ்ரீகிருஷ்ண விலாசத்தில்

புன்னைமரச்சேலை கீர்த்தனம்.

சென்னை - சூளை

ஸ்ரீ பாரதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

— —

1923

57

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

விவேகவிளக்கக் கீர்த்தனம்.

இ-ம்-முகாரி-அடதாளம்-கண்ணிகள்.

எதுவேணும்கேள்மனமே-பாவிமனமே
உனக்கெதுவேண்டாம் சொல்மனமே.

கதியென்று கணநாதன் துதிசெய்து பணிந்திட
கர்மவினைகளறுமே-அயன்
விதியன்றிவேறொரு சதிசர்ப்பனைகள்யாரும்
வேரறுந்தோடிடுமே எது

நன்மார்க்கமாகவே யென்னுளுமிருந்திட
நாதனருள்வேணுமா-இல்லாமல்
துன்மார்க்கமாக வலைந்துதிரிந்திடும்
துஷ்டருறவுவேணுமா. எது

சோதிசுடர்ப்பொருள் ஆதிசிவகுரு
சண்முகனருளவேணுமா-இல்லாமல்
மாதரைக்கைகோர்த்து மண்டலம்திரிகின்ற
மடையருறவுவேணுமா. எது

பையரவமணிந்த பக்தரக்ஷகரெனும்
பரமதயாளன்வேணுமா-இல்லாமல்

மையிட்டுக்கண்காட்டி சாடைகள்செய்திடும்
மங்கையுரவுவேணுமா. ஏது

மச்சாவதாரஞ்செய் தீனரட்சகனெனும்
மால்மருகோன்வேணுமா-இல்லாமல்
பிச்சையென்றுவருவோரை மயிர்பிடித்தடித்திடும்
பேயருறவுவேணுமா. ஏது

ஆடையளித்துடல் அன்னங்கொடுத்திடும்
ஆண்டவனருள்வேணுமா-இல்லாமல்
சாடைகள்செய்து கண்ணால்மயக்கிடும்
தாசியுறவுவேணுமா. ஏது

கனிமாங்கனிக்காகப் பூவலம்வருங்கதிர்
காமன்கருணைவேணுமா-இல்லாமல்
அனியாயமாயேழைகள் மேல்பகைதொடுத்து
அலங்கோலஞ்செய்பவன்வேணுமா. ஏது

தன்மானம்பிறர்மானம் என்றுஎன்னாளும்
தற்காத்திடுபவன்வேணுமா-இல்லாமல்
சன்மார்க்கமில்லா தலைந்துத்திரிந்திடும்
சண்டாளருறவுவேணுமா. ஏது

எந்தவகையாலும் மனைவிமக்களைக்காப்பாற்றி
ஈடேற்றும் வகைவேணுமா-இல்லாமல்
சொந்தமனைவிக்குச் சோறுதண்ணீரிடாமல்
சோரமனைவிவேணுமா. ஏது

ஐயன் திருவடியை யனுதினந்தொழுதிடும்
அடியாருறவுவேணுமா-இல்லாமல்
பொய்சாட்சிசொல்லிநிதம் வயிறுவளர்த்துத்திரியும்
பொய்யருறவுவேணுமா. எது

சண்முகனடியினைச் சர்வகாலம்பூசித்து
சன்மார்க்கம்பெறவேணுமா-இல்லாமல்
வண்மையுடனொருவன் கொடுப்பதைதடுத்திடும்
வஞ்சகருறவுவேணுமா. எது

அன்னை தந்தையர்களை யாதரித்தாண்டிடும்
அடியாருறவுவேணுமா-இல்லாமல்
முன்னைப்போகவிட்டு பின்புரணிபேசிடும்
மூடருறவுவேணுமா. எது

அந்திசந்தியனுஷ் டானஞ்செபித்திடும்
ஆசானருள்வேணுமா-இல்லாமல்
வந்துமுகங்காட்டி விந்தைநடனஞ்செய்திடும்
பாவையுறவுவேணுமா. எது

தேவாலயங்களும் தேசங்கள்தான்திரியும்
தேவரடியார்வேணுமா-இல்லாமல்
மாதரைக்கண்டு மயங்கித்திரியும்
மடையருறவுவேணுமா. எது

மதியணிசெஞ்சடைவள்ளல் அருள்முருகன்
மலர்ப்பாதம்தான்வேணுமா-இல்லாமல்

சதிசெய்துமாதர்கள் மதியைமயக்கும்பாழும்
        தையலுறவுவேணுமா. எது

வட்டமதிவதன வள்ளிநாயகிபாகன்
        மலர்ப்பாதந்தான்வேணுமா-இல்லாமல்
பட்டப்பகற்பொன்னை தட்டிபறிக்குங்கொடும்
        பாவியுறவுவேணுமா. எது

புள்ளிமயிலேறும் புனிதவடிவேலன்
        புண்ணியன்பாதம்வேணுமா-இல்லாமல்
கள்ளுண்டுசுள்ளுண்டு தள்ளாடிவெறிகொண்ட
        கசடருறவுவேணுமா. எது

சுந்தரரஞ்சித குஞ்சரிபாகன்
        மலர்ப்பாதந்தாள்வேணுமா-இல்லாமல்
தந்தைதாய்ஆஸ்திதன்னை நிந்தித்தழித்திடும்
        டம்பருறவுவேணுமா. எது

மாட்சிபெருகிய பாலனுறையும்
        மாதவன்பதம்வேணுமா-இல்லாமல்
தாட்சியெண்ணுமல் அரசாட்சிதனிலேபோய்
        பொய்சாட்சிசொல்லவேணுமா. எது

அத்திமுகவனை நித்தந்துதிசெய்யும்
        அடியாருறவுவேணுமா-இல்லாமல்
சிற்றின்பத்தினின்று உயன்று திரிந்திடும்
        தீயருறவுவேணுமா. எது

ஆறுமுகம்படைத்த ஐயன்றிருவடியை
அனுஷ்டித்தல் தான்வேணுமா-இல்லாமல்
தாறுமாருகத்திரியும் தருதலையைப்போல்
சண்டாளருறவுவேணுமா. எது

உத்தமருடன்சேர்ந்து உண்மையைப்பாவித்து
உலகநடைவேணுமா-இல்லாமல்
மத்தகஜம்போல் கொழுத்துத்தலைமீதில்
மண்போட்டுக் கொள்ளவேணுமா. எது

எச்சமயத்திற்கும் எங்கும்நிறைவுள்ளோன்
ஏகன்பதம்வேணுமா-இல்லாமல்
இச்சையில்லாமற் சிவபூசைசெய்திடும்
ஈனருறவுவேணுமா. எது

ஆலம்போலச்சீறி காலன்பாசந்தனிற்
கட்டுண்டுழலவேணுமா-இல்லாமல்
காலந்தனையளந்த மால்முருகேசன்மலர்ப்
பாதபங்கயம்வேணுமா. (எதுவேணும்)

விவேகவிளக்கக் கீர்த்தனம்

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ கிருஷ்ணவிலாசத்தில்

புன்னைமரச்சேவை கீர்த்தனம்.

பல்லவி.

மாதேயசோதையே கேளம்மா-உன்மகன்செய்த
சூதேநான்சொல்லுகிறேன் கேள்-தாயே மா

அநுபல்லவி.

போதும்போதுமொரு சூதும்வா துந்தெரி
யாதகிருஷ்ணன் வெகு சாதனமென்றான். மா

சரணங்கள்.

பட்டிக்சதவைத்திறந்துவிட்டான் பாலூட்டுதென்று
திட்டிபுருஷரைக்கூப்பிட்டான் அவரங்கேபோனர்
கட்டியெங்களைவிட்டான்
எட்டியவுறிதனில் கட்டியதயிர்வெண்ணை
சட்டியெல்லாங்கொள்ளை இட்டாண்டியம்மா. மா

பெருகி நீரோடும்வேளை கண்டான்
சேலையைவாரி
மரமீதிலேறி ஒளித்துக்கொண்டான்
துரையேசேலை
தரவேண்டுமென்றுநாங்கள் கேட்டோம்
நீங்களெல்லோரும்
கரைமீதில் வந்தால்தாறேனென்றான்
. நீர் எங்கள்மானத்தைக்
காப்பாற்ற வேண்டுமென்று கேட்டோம் மாதே

மற்றுமொருகன்னியிடத்தில்தானும்
படுத்திருந்தால்
மெத்தை மீதினில்வந்திருந்து
சண்டாளப்பாவி
விந்தைகளென்னசெய்தானோ
நாங்களென்னசெய்வோம்
நித்தியம் தங்களை தொடுத்தானே
சுற்றிலும்மாதர்கள்
இத்தனைபேரிலே பத்தினியொருத்தி இல்லையே; மா

புன்னைமரச்சேலை கீர்த்தனம்.

முற்றிற்று.